<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

OS. 35/2016

Deposition of Witness : PW1

Name : மூர்த்தி (வயது – 70)

Father's Name /W/o : த/பெ சுப்ரமணி

Religion : இந்து

Calling : –

Address : அரக்கோணம்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 07.02.2026.

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. இந்த வழக்கை யார் தாக்கல் செய்தது என்றால் நான் மற்றும் என் மனைவி வழக்கு தாக்கல் செய்தோம். இந்த வழக்கை தாக்கல் செய்த பின்பு என் மனைவி இறந்துவிட்டார் என்றாலும் அவருக்கு வாரிசு யாரும் சேர்க்கவில்லை என்றால் நான் அவரின் வாரிசு என்பதால் என் பிள்ளைகளை சேர்க்கவில்லை. என் மனைவி இறந்தபிறகு என் பிள்ளைகள் அவரின் வாரிசுகளாக இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க எந்த நடவடிக்கை எடுக்கபோவதில்லை என்றால் சரிதான்.

2. 1 ஆம் பிரதிவாதி அப்துல் சுகுப் சாகிப் என்பரின் பெயரில் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி இந்த வழக்கில் பதில் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி என்ன பதில் தாக்கல செய்தார் என்ற விபரம் நான் படித்து தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். மேற்படி பதிலுரையில் தெரிவித்துள் சங்கதிகள் சம்பந்தமாக ஆவணங்களை பார்த்து விபரங்களை தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன்.

3. 1 ஆம் பிரதிவாதி மற்றும் சுப்பிரமணி ஆகியோர் சேர்ந்து இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.373/1991 என் மீது மற்றும் மற்றவர்கள் பெயரில் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் தெரியாது. மேற்படி வழக்கில் பிறப்பித்த தீர்ப்பை ரத்து செய்யவேண்டும்

என்று காலதாமதமாக வழக்கு தாக்கல் செய்ததால் அந்த வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் நான் வழக்கு தாக்கல் செய்தேன் ஆனால் தள்ளுபடி ஆனது பற்றி தெரியாது.

4. நான் மேற்படி தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்ததற்கு உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் தாக்கல் செய்தேன். மேற்படி மேல்முறையீடு செய்ததற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் சாட்சி மீண்டும் மாற்றி மேல்முறையீடு செய்யவில்லை என்று தெரிவித்தார். அசல் வழக்கு எண்.373/1991 இல் பிறப்பித்த தீர்ப்பு செலவுத்தொகையுடன் வழங்கப்பட்டது என்றாலும் அதற்கான நிறைவேற்று மனுவில் நான் செலவுத்தொகையை செலுத்தினேன் என்றால் சரிதான்.

5. வழக்கு சொத்து சம்பந்தமாக 1 ஆம் பிரதிவாதிக்கு எதிராக இடைக்கால மனுவை தாக்கல் செய்தேனா என்றால் சரிதான். மேற்படி இடைக்கால மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் ஞாபகமில்லை. மேற்படி இடைக்கால மனு தள்ளுபடி செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியும் என்றாலும் அதனை எதிர்த்து நான் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் இல்லை. 1 ஆம் பிரதிவாதி காலமாகிவிட்டார் என்றால் சரிதான். அவரின் வாரிசுதாரர்களாக 2 முதல் 5 பிரதிவாதிகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். 2 ஆம் பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையில் தெரிவித்துள்ள சங்கதிகள் என் வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன்.

**(வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**